ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1871/18 - 2014 ජූලි මස 15 වැනි අඟහරුවාදා - 2014.07.15
*1871/18 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல : சிஎஸ்ஏ/7/8/15.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**
**அதியுத்தமராம் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை) மஹிந்த ராஜபக்ஷ.

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்தி சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

2011, நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு (LLRC) அறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் கீழ் “முக்கிய அவதானிப்புக்கள் மற்றும் விதந்துரைப்புக்கள்” என்ற தலைப்பின் கீழான ஆணைக்குழுவின் விடயப்பரப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட விதப்புரைகளை கொண்டுள்ளதாதலாலும் ;

உள்நாட்டு ஆயுத முரண்பாட்டின் காரணமாக உருவான பல்வேறு நிலைமைகளை எதிர்கொள்வதற்காக பாராளுமன்றத் தெரிகுழு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு, முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற புனர்வாழ்வுக்கான நிகழ்ச்சித்திட்டம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலுக்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம், மனித உரிமைகளின் ஊக்குவிப்புக்கும் பாதுகாப்புக்குமான தேசிய செயற்பாட்டுத் திட்டம், இராணுவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட விசாரணைக்கான நீதிமன்றங்கள் மற்றும் விசாரணைச் சபை போன்ற பல முன்னெடுப்புக்களை நான் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாதலாலும் ;

மேற்கூறிய ஆரம்ப முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, மேற்படி முன்னெடுப்புக்களின்கீழ் உருவாக்கப்பட்ட நிறுவனப் பொறிமுறைகளாலும், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினாலும் அதிசிறந்த முன்னேற்றம் எட்டப்பட்டு வருகின்றதாதலாலும் ; அனுதாப உணர்வுகளினாலும், இலங்கையின் எல்லா மக்களிடையேயான தேசிய நல்லிணக்கம், சமாதானம், ஒத்திசைவு ஆகியவற்றின் மீதான அதீத ஆர்வத்தின் காரணமாகவும், ஆயிரக்கணக்கான எல். ரீ. ரீ. ஈ. யின் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வையும், மீள்குடியேற்றத்தையும் பாதுகாத்துள்ளதோடு, அவர்களை தேசிய வாழ்க்கையின் பொது நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளேன் என்பதாதலாலும் ; 3,500 இற்கும்

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.
2-G 19007

மேற்பட்ட எல். ரீ. ரீ. ஈ. சிறுவர் சிப்பாய்களை அவர்களின் பெற்றோர்களிடம் திரும்ப ஒப்படைத்துள்ளதோடு, தங்களது கல்வியைப் பின் தொடர்வதற்கான வாய்ப்புக்களை வழங்கி இலங்கையின் சமாதானமான பிரசைகளாக அவர்களது ஆற்றலைப் பூர்த்தி செய்யவும், நாட்டை அபிவிருத்தி செய்யவும், நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார சவால்களுக்கு கூட்டாக அமைதியான தீர்வுகளைப் பெறவும், எல். ரீ. ரீ. ஈ. இன் தலைவர்கள் பலரை பகிரங்கமாக வன்முறையை நிராகரித்து கைவிடவும் ஊக்குவித்ததோடு, சனநாயக சட்டகத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக பொது நடைமுறை அரசியல் வாழ்வை ஏற்கச் செய்துள்ளதாதலாலும் ;

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் விசேடமாகவும், பொதுவாகவும் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக விசாரணை தேவைப்படுகின்ற பல்வேறு விடயங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொதுமக்கள் நலனின் அக்கறையின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை நான் கொண்டிருப்பதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கையிட 2013, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1823/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் விடயப்பரப்பை இத்தால் விரிவாக்குகின்றேன்.

(அ) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் 4.359 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதற்குத் தொடர்புடையதாய், ஆணைக்குழு இதன்பிரகாரம் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கையிட வேண்டுமென இத்தால் பணிக்கப்படுகிறது ;

(i) 2009, மே மாதம் 19 ஆந் திகதியில் முடிவுற்ற உள்நாட்டு ஆயுத முரண்பாட்டில் பொதுமக்களின் உயிரிழப்புக்கு வித்திட்ட பிரதான காரணங்களும், சூழ்நிலைகளும், யாராவது தனிநபரோ, குழுவோ அல்லது நிறுவனங்களோ நேரடியாக அல்லது மறைமுகமாக சர்வதேச மனிதாபிமான சட்டம் அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மீறல் அல்லது மீறல்கள் காரணமாக இதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளார்களா என்பது பற்றியும் ;

(ii) அவ்வாறு பொதுமக்களின் உயிரிழப்பு ஆயுத முரண்பாடுகளின்போது இலக்கிடப்பட்ட இராணுவ நோக்கங்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற விகிதாசார தாக்குதல்களின்போது ஏற்படக்கூடிய, அத்தோடு சர்வதேச மனிதாபிமான சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள, ஒருங்கிணைந்த சேதங்களை உள்ளடக்குவதற்கான அளவைக் கொண்டுள்ளதா, அத்தோடு கடைப்பிடிக்க வேண்டிய ஒப்பந்த விதிகளை கடைப்பிடிக்கையில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டனவா அல்லது எதிர்பாராமல் ஏற்பட்டனவா என்பது பற்றியும் ;

(iii) இலங்கையின் ஆயுதப் படைகளால் ஆயுத முரண்பாட்டின் விதிகள், சர்வதேச மனிதாபிமான விதிகள் ஆகியவற்றின் கீழான மேன்மை, இராணுவத் தேவை, விகிதாசாரத் தன்மை ஆகியன பின்பற்றப்பட்டமை அல்லது அலட்சியப்படுத்தப்பட்டமை என்பது பற்றியும் ;

(iv) அரசு சாராத நபராக எல். ரீ. ரீ. ஈ. தனது ஆயுத நடவடிக்கைகள் தொடர்பான நடத்தையில் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு உட்பட்டதா என்பது பற்றியும் ;

(v) எல். ரீ. ரீ. ஈ. மனிதக் கேடயங்களாக மக்களைப் பயன்படுத்தியமை, அவ்வாறான நடத்தை சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை எந்தளவில் மீறப்பட்டிருக்கிறது என்பதுடன், அது சாதாரண பொதுமக்களின் உயிரிழப்புக்களுக்கு கணிசமான அளவு பங்களித்திருக்கிறதா அல்லது பங்களித்திருக்கக்கூடுமா என்பது பற்றியும்;

(ஆ) சர்வதேச மனிதாபிமானச் சட்டம் அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு மாறாக எல். ரீ. ரீ. ஈ. யினர் அல்லது எல். ரீ. ரீ. ஈ . ஏதாவது அரசியல் கட்சிகளோடு இணைந்த சட்டரீதியற்ற இராணுவக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் சிப்பாய்கள் ஆட்சேர்ப்பு.

(இ) எல். ரீ. ரீ. ஈ . யின் சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகள், அவ்வாறான சட்டரீதியற்ற நடவடிக்கைகளின் மூலமாகப் பெறப்பட்ட நிதி மற்றும் ஏனைய வளங்கள் இலங்கையில் எல். ரீ. ரீ. ஈ. யினால் மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய மற்றும் கொரில்லா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டமை.

(ஈ) எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் அல்லது அவர் சார்பில் செயற்பட்ட எவரேனும் ஆட்களின் நேரடி உத்தரவின்கீழ் சிறுவர் சிப்பாய்களையும், ஏனைய போராளிகளையும் பயன்படுத்தி எல். ரீ. ரீ. ஈ. யினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள், அத்தோடு அவ்வாறான நடவடிக்கைகள் ஆகியவை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் கொண்டுள்ள குற்றத்தன்மை.

மேலும், சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிபுணத்துவமும், மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் சார்பான சட்ட அறிவினையும் சம்பந்தப்பட்ட ஏனைய பரிமாணங்களினதும் அனுபவங்களையும் கொண்ட கண்ணியமிக்க சர்வதேச நிபுணர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்பது எனது கருத்தாகும். ஆணைக்குழுவின் பணிக்குப் பொருத்தமான விடயங்களில் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் ஆலோசனை வழங்குவதற்காக கீழ்க்காண்பவர்களை விசாரணை ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவிற்கு நியமிப்பதோடு, குறித்த ஆலோசனைக்குழுவிற்கு அவ்வப்போது தேவைப்படும்போது நான் மேலும் நிபுணர்களையும் நியமிக்கலாம்:

1. The Right Honourable சேர் டெஸ்மன்ட் டி சில்வா, சனாதிபதி சட்டத்தரணி (தலைவர்)
2. சேர் ஜெப்றி நைஸ், சனாதிபதி சட்டத்தரணி
3. பேராசிரியர் டேவிட் கிரேன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து பதின்நான்காம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் நாளன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.